மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (29-4-1986) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-04 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

8. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

70. கர்நாடக மாநில போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான பயணிகள் பேருந்துகளுக்கு 23—3—1986 முதல் 1—4—1986 முடிய உள்ள காலத்திற்குச் செலுத்தக் கூடிய வரியினின்று விலக்களிப்பது குறித்து உள் துறையின் 7–3–1986 ஆம் நாளிட்ட 582 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

71. தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு சாராய (சில்லறை விற்பனை கடைகள்) விதிகளை வகுப்பதுகுறித்து மதுவிலக்கு— ஆயத்தீர்வை துறையின் 18—6—1985 ஆம் நாளிட்ட 593 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட [அறிவிக்கை தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

147. கோரிக்கை எண் 1—நிலவரித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1986–87 (தமிழ், ஆங்கிலம்).

148. வருவாய்த்துறையின் 1986–87 ஆம் ஆண்டிற்கான சாதனை அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

149. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1981–82 ஆம் ஆண்டிற்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கையில் வனம் மற்றும் மீனளத் துறை தொடர்பான பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தொன்பதாவது அறிக்கை (தமிழ் ஆங்கிலம்).

150. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1981–82 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (வணிகம்) போக்குவரத்துத்துறை பற்றிய பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் முப்பதாவது அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).